சிவ சிவ

மூலையும் மூளையும்



சிவசிவ சரவணன்

கட்டிட பொறியாளர், வாஸ்து ஆலோசகர்

287, மேலமாசி வீதி, மதுரை-1.

போன் : (0452) 2331730

செல் : 9344100694
98430 50860



01-01-2007 வெளியீடு • ரூ. 10-00



விநாயகயா போற்றி

மூளை துரிதமாக செயல்பட :-

அளியார் கமலத்தில் ஆரணங்கே
அகிலாண்டமும் நின் ஒளியாக நின்ற
ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்த கரணங்கள் விம்மிக்
கரைபுரண்டு வெளியாய் விடின் எங்ஙனே
மரப்பேன் நின் விரகினையே

அபிராமி அந்தாதி – 82வது பாடல்

மூலைகள் தூய்மையடைய :-

ஓம் அநுக்ரகரூபாய வித்மஹி!
பூமி புத்ராய தீமஹி தந்நோ வாஸ்து
புருசப்ரசோதயாத் !!

இந்நூல் படைக்கச் செய்த தாய், தந்தையருக்கும், எழுத தூண்டிய அடியேனுடைய குருநாதருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவன் கட்டிடக் கலையுடன் எழுத்தாற்றலையும் கொடுத்து உயர்த்தியது அடியேனுக்கு கிடைத்த வரப்பிரசாதம். மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூல் வெளிவர விளம்பரங்களை கொடுத்து உதவிய அனைவருக்கும் என்னுடைய பணிவான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



சிவ சிவ

அணிந்துரை

மூளையும் - மூலையும் : நாம் பிறக்கும் போது இறைவன் மூளை என்ற பகுதியில் முன் ஜென்ம பதிவுகளுடன் அனுப்புகிறார். அறியும் பருவத்தில் நல்லவை, தீயவைகள் மூளையில் (Brain) பதிவாகிறது. அதனால் உயர்வு தாழ்வுகள் ஏற்படுகிறது. இப்பதிவேடுகள் தங்குவதும், மறைவதும் வீட்டின் நான்கு மூலைகளே காரணம். இந்நூ–ல் மூளையும் – மூலையும் ஒன்றுக்கொன்று எவ்வளவு தொடர்புள்ளது என்பதை கணவன் (மூளை) – மனைவி (மூலை) உறவு போல் பின்னி பிணைத்து வடிவமைத்துள்ளேன்.

மூளையின் பதிவுகள், மூலையின் செயல்கள், மாணவர்களின் மறதி, அசமந்தம், ஞாபகத்திறன், வியாபாரிகள், தொழிலாளர்கள், இன்ஜினியர்கள், பேங்க் ஊழியர்கள், இளம் சாதனையாளர்கள், உயர்ந்த பதவியில் மரணம், கோயிலின் உயர்வு, வீட்டின் காற்றின் தத்துவம், தியானம், அப்துல்கலாம் போல் மெகா மூளைகளுடன் குழந்தைகள் பிறக்க மற்றும் புகைப்படங்கள் என பல விசயங்கள் கூறியுள்ளேன்.

இந்நூல் படிக்கும் போது மதுரை சொக்கநாதரின் (திருவனந்தல் பூஜை) அதிகாலை பூஜை பார்த்த மகிழ்ச்சியும், முடிக்கும் போது மீனாட்சியம்மனின் பள்ளியறை பூஜை பார்த்த ஆனந்தமும் இருக்கும் என நம்புகிறேன். உள்ளம் தெளிவாகும், மனம் திருப்தியடையும். மூளையின் வேலை எவ்வளவு என்பதையும், மூலையின் உபயோகங்கள் எத்தனை எத்தனை என்பதும் புரியும். அமைதியான இடத்தில் அமர்ந்து படிக்கவும். ஒருமுறைக்கு இருமுறை படித்து பயன்பெறவும்.

வாழ்க வளமுடன்.

இந்நூல் உங்கள் மூளையில் உள்ள அறிவை சிந்திக்கச் செய்யும். வீட்டின் மூலைகள் சரிதான என்று ஒப்பிட்டுப் பார்க்க செய்யும். அதனால் மதிப்புமிக்க மூளையையும் துல்லிதமான மூலையையும் தவறுகள் இருப்பின் தாங்களாக திருத்தம் செய்து மேலும் பிரச்சினையில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.

வருடத்திற்கு துணிமணி, பட்டாசு, இனிப்பு, உடல் கெடும் மது, நோயை அழைக்கும் மாமிசம் என பல செலவுகள் செய்கிறோம். இவை அனைத்தும் சில மணி நேரம், சில நாட்கள், சில மாதங்களில் மறைந்து போகும்.

அடியேனிடம் ஒரு முறை பார்த்து ஆலோசனை (Councilling) பெற்றுக் கொள்வதினால் வீட்டின் மூலைகள், அறைகள் அமைப்பு, பூஜை அறை, சமையல் அறை, தியானம் எங்கு செய்ய சிறப்பு, ஆழ்குழாய் கிணறு இவைகள் எவ்வாறு இருந்தால் நம் மூளையின் அறிவு திறன், ஞாபக சக்தி, குழந்தைகள் வகுப்பில்

முதல் மாணவனாக வர, செய்தொழில் முன்னேற்றமடைய என இது போன்ற பல தகவல்களையும் நீங்கள் மட்டுமின்றி உங்கள் குடும்பம், ஏன் வம்சத்திற்கே உபயோகமாக இருக்கும்.

மேலும் ஏதேனும் சந்தேகம் வந்தால் எப்பொழுது வேண்டு மானாலும் தொலைபேசியில் அல்லது இமெயில் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

அடியேன் ஆனி மாதம் மூல நட்சத்திரத்தில் பிறந்தவன். தனுசு ராசி சிவனுடைய வீடு, நித்திய சிவபூஜை செய்கின்றேன். (1986–89)ல் டிப்ளமோ சிவில் இன்ஜினியரிங் படித்துள்ளேன். Gold Medalist.

பல நகரங்களுக்கு சென்று கட்டுமான கலையில் அனுபவம் பெற்றுள்ளேன். 300க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறேன். 100க்கும் மேல் பல நகரங்களுக்குச் சென்று வாஸ்து பார்த்து மாற்றம் செய்து கொடுத்திருக்கின்றேன். கட்டிடம் கட்ட ஜோதிட ரீதியாக ஆலோசனையும் பலருக்கும் வழங்கியுள்ளேன்.

1) வாஸ்து சாஸ்திரம் (ஜோதிட ரீதியான விளக்கம்), புட்டா வாஸ்து, வாஸ்து பொக்கிஷம் என பல நூல்களை இலவசமாக வெளியிட்டுள்ளேன்.


2) தினமலர், சினேகிதி, ஞானசிந்தாமணி, விண்வெளி ஜோதிடம் இன்னும் பல இதழ்களில் அடியேனின் கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

3) அடியேனின் வாஸ்து பொற்குடம் என்ற நூலை 'சென்னை கற்பகம் புத்தகாலயம்' பிரசுரம் செய்துள்ளது. விலை 75.00 ரூபாய். இதில் வீடு வாஸ்து செய்வது முதல் கிரகப்பிரவேசம் வரை பல விளக்கங்கள் கொடுத்துள்ளேன். தமிழ்நாட்டில் அனைத்து புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். (நூலின் சிறப்பு–வாஸ்து, ஜோதிடம் கலந்து எழுதியுள்ளேன்.)

4) அடுத்ததாக அடியேனின் 'வரைபடங்களும்–வாஸ்துவும்' என்ற நூல் வெளிவர உள்ளது. அதில் 60 மாதிரி படங்கள், முன் முகப்பு விளக்கங்கள் உள்ளன. படித்து பயன்பெறுங்கள்.

கட்டிடத்தில் காலை/மாலை அக்னி ஹோத்ரா சொல்லிக் கொடுத்து அதன்படி செய்ய வைக்கின்றேன். நல்ல மன அமைதி காண முடிகிறது. அதிக ஆற்றல் கிடைப்பது உணர முடிகிறது. உங்கள் கட்டிடத்திலும் செய்து காட்டி ஆற்றல் கிடைக்க செய்து உணர வைக்க முடியும். நம்பிக்கையுள்ள நல்ல வேலையாட்கள் வைத்து நல்லமுறையில் கட்டிடம் கட்டி தருகிறோம். அடியேன் வீடு கட்டிக் கொடுத்தால் அடுத்தடுத்த வீடு வாங்கும் யோகம் உண்டாகும். செல்வ செழிப்புடன் வாழ்கிறார்கள். வீடு கட்ட, ஆலோசனை பெற மூலை, மூளை மற்றும் வீட்டின் குறைகள் இருப்பின் தொடர்பு கொள்ளவும்.

அடியேன் மாதத்தில்
1-10 மற்றும் 21-30ந் தேதி வரை மதுரையில் இருப்பேன்.
11-20ந் தேதி வரை வெளியூரில் எங்கு வேண்டுமானாலும் அழைக்கலாம். வருகை புரிவேன்.



மூளை : மனிதனின் சிரசில் மூளை அமைந்துள்ளது. அறிவின் (சூரியன்) ஆட்சி இங்கு தான் நடைபெறுகிறது. ஞாபக சக்தி, செயல், வேகம், தூக்கம் போன்றவை மூளையின் உதவியோடு கட்டுப்படுத்தப்படுகிறது. இம்மூளை இரண்டு பிரிவுகளாக உள்ளது. (வலது, இடது மூளை)

வலது மூளை : நாம் பார்க்கும் நிறங்கள், இயற்கை காட்சிகள், வீடு, முகம், அடையாள குறிகள், வாகனம் போன்றவை வல – இடக்கண் என்ற கேமராவில் போட்டோ எடுத்து, வலது மூளையில் பதிவாகிறது. படைப்பாற்றலில் கொடி கட்டி பறப்பவர்கள் வலது மூளையை பயன்படுத்தும் சொந்தக்காரர்கள்.

இடது மூளை : எழுத்துக்கள், நாவல், நம்பர்கள், கெமிஸ்ட்ரி பார்மூலா போன்றவை இடது மூளையில் பதிவாகும். கணித மேதைகள், விஞ்ஞானிகள் இவர்களுக்கு இடது மூளை பயன்படுத்தும் சொந்தக்காரர்கள்.


மூலை :- வீட்டின் இரண்டு சுவர்கள் சந்திக்குமிடம் மூலை என்று பெயர். இதில் நான்கு திசைகள் இணைந்து நான்கு மூலைகள் கொடுக்கின்றன. வ (N), கி(E), மே (W) தெ (S) NEWS (செய்தி). நான்கு திசையில் இருந்து ஏதோ ஒரு மூலையில் நடப்பவை செய்தி. அதை நாம் கேட்க உதவுவது நமது மூளை. வடக்கு – கிழக்கு – சந்திக்குமிடம் வ/கி (குரு பகவான்) மூலை ஈசான மூலை என்று பெயர். தெற்கு – மேற்கு சுவர் சந்திக்குமிடம் தெ/மே (கன்னி) மூலை – என்று பெயர். வ/மே–வாயு மூலை. தெ/கி–அக்னி மூலை.

வீட்டின்–வ/கி மூலை வழியாக சக்திமிக்க ஆற்றல் (Flow of Electron) வந்து தெ/மே மூலையில் உயிர்ப்படைகிறது (Air Energy converted to power energy) இம் மூலை நன்றாக உபயோகிப்பவர்கள் – சாதனையாளர்களே!

வாழ்க்கையில் செல்வ செழிப்புடன் இருக்க செய்து பாருங்களேன்...

1) இரவு தாமிரச் செம்பில் நீர் எடுத்து அதில் 5"x5" சைஸ் பிரமிடு வைத்து மூடி, காலை பல் துலக்கியவுடன் அந்நீரை குடித்து வர பல நோய்கள் குணமாகும். வயிற்று புண், தலைசுற்றல், நுரையீரல் மற்றும் உஷ்ண சம்பந்தப்பட்ட வியாதி குணமடையும். நல்ல சுறுசுறுப்பாக இருக்க முடியும். பலகை வைத்து – செம்பை வைக்கவும். அதிக ஆற்றல் கிரகிக்கும் சக்தி தாமிரத்திற்கு மட்டுமே உள்ளது. கோயில் கலச தத்துவம்.

2) சுப காரியம் (திருமணம், வீடு கட்ட, பணம் வருவது மற்றும் பல) தள்ளிப் போய் கொண்டே இருந்தால் உங்களுக்கு நடக்க வேண்டியவை அனைத்தும் எழுதி மஞ்சள் தடவி அதை குலதெய்வம் உள்ள அறையில், பூஜை அறையில், சுவாமி பெட்டகத்துடன் வைத்து தினமும் பூஜை செய்து வர சீக்கிரமே இறையருளால் வேண்டுதல் நிறைவேறும்.



(தமிழ்நாட்டில் பல கோயில்களில் பிரார்த்தனை எழுதி வைக்க இறைவன், இரவில் பரிசீலனை செய்து பலன் தருவார் என்பது வழக்கத்தில் உள்ள ஐதீகம்)

3) மகன், மகள் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி சீக்கிரமே வீடு திரும்ப அல்லது வெளிநாடு சென்ற கணவன் வர ரோகினி, ஹஸ்தம், திருவோணம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரத்தன்று வடகிழக்கு மூலையில் சிறு பிளாஸ்டிக் டப்பாவில் தண்ணீர் ஊற்றி அதில் 3"x3"x1" சைஸில் காந்தம் (Magnet) போட்டு வைக்க ஈர்ப்பு சக்தியினால் சில நாட்களில் அவர்கள் குழந்தை, மனைவி ஞாபகம் வந்து வீடு திரும்புவார்கள்.

4) மகன், மகளுக்கு சீக்கிரம் திருமணம் நடைபெற வியாழக்கிழமையன்று அரசங்குச்சியை பசு நெய் இட்டு குருஹோரையில் அக்னி செய்து குரு காய்த்ரி 21 முறை சொல்ல சில வாரங்களில் திருமணம் நிச்சயமாகும்.

5) கணவன், மகன், மகளுக்கு வேலை கிடைக்க வீட்டின் வ/மே மூலையில் படுக்கையறையை உபயோகித்து வர சீக்கிரமே உயர்ந்த வேலை கிடைக்கும்.

6) வீட்டின் வ/கி அல்லது தெ/மே மூலையில் 3'0" உயரத்தில் 5"x5" அல்லது 12"x12" சைஸில் பிரமீடு வைத்து அதனுள் மஞ்சள் பேப்பரில் பச்சை மையில் மகன் வெளிநாடு செல்ல, கார் வாங்க, வீடு கட்ட, மகள் திருமணம் என நமது அனைத்து வேண்டுதல்களையும் எழுதி 45நாட்கள் அப்பிரமிடுனுள் வைத்து 46 நாள் சக்தியூட்டப்பட்ட எழுதிய பேப்பரை வெள்ளிக்கிழமை காலை 7.30 முதல் 9.00 மணிக்குள் அல்லது சனிக்கிழமை 6.00 முதல் 7.30 மணிக்குள் பூஜை செய்து கொஞ்சம் நெய் இட்டு அக்னி செய்து விடவும். அடுத்த 48 நாட்களுக்குள் பேப்பரில் உள்ள வேண்டுதல்கள் சக்தியூட்டப்பட்டு காற்றில் கலந்து ஒவ்வொன்றாக நடந்து வரும். நிச்சயம்! நிச்சயம்!! நிச்சயம்!!!

7) சகல செல்வமும் கிடைக்க, நினைத்தது நடக்க, வாகன யோகம் உண்டாக, பொன் ஆபரணங்கள் சேர, அரசாங்கத்தில் உயர்ந்த பதவி அடைய வேண்டுமெனில் பௌர்ணமியன்று மாலை 6.00 மணியளவில் வீட்டின் நடு ஹாலில், வ/கி அல்லது தெ/மே ல் கிழக்கு முகமாக 21, 48, 101 விளக்கு (பித்தளை அல்லது வெள்ளி) தீபமேற்றி விளக்கு பூஜை செய்து 11 சுமங்கலிகளுக்கு முடிந்ததை (பால், பழம், குங்குமம், பூ, சட்டை) கொடுத்து ஆசீர்வதம் பெற அஷ்ட லக்ஷ்மிகள் வீட்டில் வாசம் செய்வார்கள். வேண்டியது பிசிரில்லாமல் நிறைவேறும். மூலைகள் தெய்வங்கள் வசமாகும். மூளைகள் தெளிவாகும்.



8) வீட்டின் சுப நிகழ்ச்சியன்று வேத விற்பன்னர்கள் அழைத்து வேதம் ஓதுதல், மேளம், நாதஸ்வரம், இசைக்கச் செய்தல் முடியாதபட்சத்தில் டேப்ரிக்கார்டரில் போட்டு கேட்டல், தீய சக்திகள் வெளியேறும். நல்ல அதிர்வலைகள் உருவாகும் மூலைகளில் முடங்கி கிடக்கும் சக்திகளை மெருகேற்றுவதும் மூளைகளில் அறிவுத்திறன் அதிகரிப்பதும் நடக்கும்.

9) ஏதோ மிகப்பெரிய வேண்டுதல் ஒன்றே ஒன்று மட்டும் எண்ணிக் கொண்டு தெ/மே மூலையில் சுத்தம் செய்து பலகையில் அமர்ந்து அதிகாலை முதல் ஓம் நமச்சிவாய, ஓம் நமோ நாராயணாயா, ஓம் சக்தியே நம என்று 27,000 முறை ஜெபிக்கவும். சில தினங்களுக்குள் கண்டிப்பாக பிரார்த்தனை நிறைவேறும். தெ/மே மூலையும் சக்தியுள்ளதாக மாறும். இதை செய்த அன்றே உணரலாம்.

10) வீட்டில் சுபநிகழ்ச்சி, சடங்கு, வளைகாப்பு, திருமணம் நடக்கும் முதல் நாள் காலை குல தெய்வ தீர்த்தம், அழகர்கோவில் தீர்த்தம் மற்றும் ஏனைய மலை தீர்த்தங்கள் கொண்டு வந்து வீடு முழுக்க தெளித்து மாலை 6 மணிக்கு வ/கி மற்றும் தெ/மே இரு மூலைகளில் விளக்கேற்றி வைத்து வழிபட சுபநிகழ்ச்சி எண்ணியபடி நடக்கும். எந்த அசம்பாவிதமும் நடக்காது. மூலைகள் கெட்டுப்போயிருந்தாலும் சுத்தமாகும். சுபநிகழ்ச்சியன்று இரவு சிறிய சூடம் தண்ணீரில் கரைத்து வீட்டின் முன் தெளிக்க கண் திருஷ்டிகள் மறையும்.

ஞாபகசக்தி, நினைவாற்றல் : மூளையில் வலது மூளை, இடது மூளை என்று இரு பிரிவுகள் உள்ளது. வலது மூளையில் உருவங்கள் மட்டுமே பதிவாகும். ஆனால் இடது மூளையில் எழுத்துக்கள் பதிவாகும். எவன் ஒருவன் எந்த பொருளையும், எந்தச் செயலையும் உருவமாக வலது மூளையில் பதிவு செய்து வருகிறானோ அவனுடைய ஞாபக சக்தி கூடும். எளிதில் மற்றும் விரைவில் வெளிப்படுத்த முடியும்.

(எ.கா) (1. கார், 2.பைல், 3.கீ செயின், 4. மரம், 5.குரங்கு, 6.வைகை, 7.இரயில், 8.கண்ணாடி, 9.பேனா, 10.பல்பு, 11.டிபன் பாக்ஸ், 12.யானை, 13.புத்தகம், 14.கம்ப்யூட்டர், 15.பஸ், 16.டாக்டர், 17.பேங்க், 18.சர்ச், 19.ஸ்டேசன், 20.பயர் இன்ஜின், 21.ரஜினிகாந்த், 22.அப்துல்கலாம், 23.சோனியாகாந்தி, 24.அமிதாப் பச்சன், 25.கருணாநிதி)

மேலேயுள்ள 25 பொருட்கள் 1 முதல் 25 வரை அல்லது 25 முதல் 1 வரை எப்படி கேட்டாலும், முன் பின்னாக எப்படி மாற்றிக் கேட்டாலும் வலது மூளை உதவியுடன் சொல்ல முடியும். மற்றும்

99	83	17	25	42
11	47	4	13	18
19	26	21	2	76
5	51	65	77	81
94	9	56	62	73

மேலேயுள்ள கட்டங்களில் 1 முதல் 100 வரை எந்த எண்களையாவது 25 கட்டங்களில் நிரப்பி குறுக்கும், நெடுக்கும், மற்றும் 13வது கட்டம் 24வது கட்டம் என எங்கு கேட்டாலும் சொல்ல முடியும். உருவங்கள் மூலம் பதிவு செய்யப்பட்ட வலது மூளையால். உங்களாலும் அடியேன் சொல்ல வைக்க முடியும்.

மேலும்

1) ATM Card, Bank Account No, Email No., Computer Secrete No. நம்பர் எப்படி ஞாபகம் வைத்துக் கொள்வது

2) திருமண தேதி, குழந்தைகள் பிறந்த நாள், சொந்தக்காரர்கள் திருமண அழைப்பிதழ் தேதி நினைவில் எப்படி வைத்துக் கொள்வது ?

3) போன் நம்பர், செல் நம்பர் மாணவர்கள் வகுப்பில் முதலாவதாக வர, வகுப்பில் விழிப்புணர்வுடன் இருக்க, கெமிஸ்ட்ரி பார்முலா, மன்னர் ஆட்சி செய்த ஆண்டு... ஆகியவற்றை எப்படி நினைவில் வைத்துக் கொள்வது ?

4) தமிழ்நாட்டில் 1926 முதல் இன்று வரை இருக்கும் முதலமைச்சர்களின் பெயர்கள், மற்றும் பிரதமர்களின் பெயர்கள் எப்படி ஞாபகம் வைத்துக் கொள்வது ?

5) இந்தியாவின் 29 மாநிலம் அதன் தலைநகரம் அதில் ஆட்சி செய்யும் முதலமைச்சர்கள் பெயர்கள் எப்படி ஞாபகம் வைத்துக்கொள்வது ? அடியேன் கூறமுடியும். உங்கள் குழந்தைகளாலும் கூற வைக்க முடியும்.

6) **ஆண்கள் :** வண்டி சாவி, எங்கேயோ வைத்து தேடுவது, ஆபீஸ் பைல் மறப்பது, பேனா, செல்போன், பணம், பர்ஸ், என்ன வேலை செய்வது என்று எழுதி வைத்த பேப்பர், பாத்ரூம் சென்று துண்டு கேட்பது, கடையை பூட்டிவிட்டு சிறிது நேரம் கழித்து வந்து பூட்டை இழுத்து பார்ப்பது, இரயில் டிக்கட், லாட்ஜ் சாவி மற்றும் கோயிலுக்கு செல்லும் போது வீட்டிலேயே பூஜை சாமான்கள் செட் வைத்து விட்டு செல்வது, பாத்ரூம் லைட் அணைக்க, மேற்கூறிய அனைத்தும் தினமும்

உபயோகிக்கின்றோம். ஆனால் மறக்கின்றது. என்ன காரணம் மூலையா? மூளையா?



7) **பெண்கள் :** பெண்கள் படுக்கைக்கு சென்றபின் கேஸ் மூடிவிட்டேனா என்று கொஞ்சம் போய் பாருங்க, பின் கதவு சரியா பூட்டிட்டேனா என்று தெரியலைங்க, மழை வந்து நனைந்தபின் காய்ந்த துணிகள், வடகம் எடுப்பது, மாத்திரை சாப்பிட மறப்பது, சொந்தங்கள் அழைத்த சுபநிகழ்ச்சிகள் மறப்பது, தண்ணீர் கொதித்த பின் கேஸ் அடுப்பு அணைப்பது? எதனால் – மூலையா, மூளையா?

என்ஜினியர், டாக்டர், வக்கில் (லா பாயிண்ட்ஸ் எப்படி ஞாபகம் வைத்துக்கொள்வது) பேங்க், மற்றும் வியாபாரிகள் அடுத்த நாள் Activities, Appointments, பலசரக்கு வாங்க போகும் போது சாமான்கள் லிஸ்ட் எழுதாமல் 30க்கும் மேல் எப்படி ஞாபகம் வைத்துக் கொள்வது? அலாரம் இல்லாமல் எப்படி எழுந்திருப்பது, படுக்கைக்கு சென்றவுடன் எப்படி தூங்குவது.

மேலேயுள்ள அனைத்தும் சுலபமாக நடைபெற மூளைக்கு பயிற்சி தர வேண்டும். மூளையை துல்லிதமாக வைத்துக் கொள்ள வேண்டும். அதே சமயம் வீட்டின் மூலையான ஈசானம் குரு பகவானுக்குரியது. எனவே அம்மூலையை சுத்தமாகவும், அதிக பாரம் ஏற்றாமலும் பார்த்துக் கொண்டால் மூளையும், மூலையும் பாதுகாக்கப்படும்.

விவரமான தகவல்களுக்கு அடியேனை தொடர்பு கொள்ளவும்.

1) சாப்பிட்டவுடன், உடற்பயிற்சி செய்தவுடன் உடனே தலைக்கு வெந்நீர் (சுடு தண்ணீர்) ஊற்றுதல் கூடாது. மூளைக்கு அதிக இரத்தம் சென்று கொண்டிருக்கும். அது தடைபட வாய்ப்புள்ளது. வ/மே மூலையில் குளிக்கவும். கிழக்கு திசை பார்த்து குளிக்க ஆரோக்கியம் கூடும். (ஆடையின்றி குளித்தல் கூடாது) சந்திர தோஷமுண்டாகும்.

2) படுத்துக் கொண்டு டிவி பார்ப்பது மூளையை பாதிக்கும். படுக்கும் போது மூச்சில் சுவாசக்காற்று சம சீராக இருக்கும். நாம் கண்ணுக்கு வேலை கொடுப்பதால் பார்வை நரம்புகள் பாதிக்கப்படும், மூளையில் காற்று / இரத்தம் தடை பட வாய்ப்புள்ளது.

3) வீட்டின் கைக்குழந்தையை உயரே தூக்கி போட்டு பிடித்தால் குழந்தை அதிகமாக சிரிக்க வாய்ப்புள்ளது. நமக்கும் சந்தோஷமாக இருக்கும். இதில் விபரீதம் என்னவென்றால் சிறு குழந்தைக்கு மூளையில் இரத்தமும், காற்றும் அதிபயங்கரமாக செல்ல வாய்ப்புள்ளது. இதனால் குழந்தையின் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும். காரணம் பெரும்பாலும் குழந்தை படுத்தே இருக்கும். திடீரென்று உயரபிடிப்பதால் பாதிப்பை ஏற்படுத்தும். வீட்டின் வ/கி மூலையை கவனிக்கவும். தவறிருந்தால் மாற்றிக்கொள்ளவும்.


4) கணவன், மனைவி, ஏன் குழந்தைகள் கூட கோபத்தில் தலையில் (கபாலத்தில்) அடித்துக் கொள்கின்றனர். இதனால் நெற்றிக் கண் கெடவும், சகஸ்ர சக்கரத்தின் ஆற்றல் வீணாகவும் வாய்ப்புள்ளது. மூளையில் இரத்தம் விட்டுவிட்டு பாயும். மூளையை குரு பகவான் இயக்குகின்றார். முன்னோர்கள், குருநாதர், குருபகவான் ஆசீர்வாதம் கிடைக்காது. குழந்தைகள் படிப்பு, திருமண தடை, செல்வம் குறைந்து போகவும் வாய்ப்புள்ளது. தலையில் அடித்துக் கொள்பவர்கள் வீட்டின் வ/கி மூலையை கவனிக்கவும். தவறுள்ளது – தலையில் கை வைக்காதீர்கள்.

பிரச்சனைகள் அதிகரிக்காமல் தடுக்க : இன்று அணிந்த சட்டை, வேஷ்டி, பேண்ட் போன்றவை மறுநாள் துவைக்காமல் உபயோகித்தல் கூடாது. (உம்.) இன்று நன்மை நடந்தால், அதே சட்டை அணிவதால் மறுநாள் இருமடங்கு நன்மை கிடைக்கும். கஷ்டமெனில் அதே இருமடங்காகும். நாம் சுவாசிக்கும் மூச்சு காற்று, கோள்களின் ஒளிக்கதிர் நாளுக்கு நாள் மாறும். இதனால் நாம் அணியும் துணியில் அவ்வொளி ஒட்டியிருக்கும். கசங்காமல் இருந்தால் கூட தண்ணீரில் முக்கி தான் மீண்டும் அணிய வேண்டும்.

குழந்தைகள் இரவில் அழுவதை தடுக்க... தெ/மே மூளையில் (கன்னி) இரவு 8 மணியளவில் பசு நெய்யில் பஞ்சு திரி போட்டு மண் சட்டியில் விளக்கேற்றி (பசு நெய் மருத்துவ குணம் கொண்டது) 2 மணி நேரம் சுடர்விட்டு எரிய வேண்டும். மின்விசிறி (Fan) தவிர்க்கவும். அறை முழுவதும் உள்ள நச்சு காற்று வெளியேறி தூய்மையான காற்று மற்றும் அதிக ஆற்றல் உள்ளே வரும். குழந்தை மூளைக்கு சரியாக நல்ல காற்று போகாததால் அழுகின்றன. சில குழந்தைகள் அழுவதுடன் வீட்டிற்கு வெளியே கொண்டு சென்றால் அழுகை நின்று விடும். காரணம் வீட்டிலுள்ள நச்சுக்காற்றே. குழந்தையை தொட்டிலில் இடுவது நன்மை. தரையில் படுக்க வைத்தல் தவறு. அசுத்தமான (நச்சு) காற்று குழந்தை சுவாசிக்கும் போது உட்கொள்ள தொந்தரவு ஏற்படும். 15 நாட்களுக்கு ஒரு முறை அல்லது பௌர்ணமியன்று அவ்விளக்கை ஏற்றவும்.

பணக்கஷ்டம் தீர, பணம் பல வழிகளில் கிடைக்கச் செய்தொழில் மிகப்பெரிய லாபம் கிடைக்க, கணவருக்கு, குழந்தைகளுக்கு செல்வம் கிடைக்க என்ன செய்ய வேண்டும்?

வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி முதல் 9.00 மணியளவில் நல்ல முத்தலான தேங்காயை சரிபாதியாக உடைத்து அதில் பசு நெய் விட்டு 5 பஞ்சு திரிகள் போட்டு தீபமேற்றவும். சுக்ரனுடைய காயத்ரி, சந்திரனுடைய காயத்திரி 21 முறை சொல்லவும். அனைத்து தெய்வங்களையும் நினைத்து தூபதீபம் காண்பிக்கவும். இப்பூஜை 3 நாட்கள் ஏற்றி வழிபடவும். பௌர்ணமி, அமாவாசை, சங்கடஹர சதுர்த்தி, விசேஷ நாட்களில் செய்யலாம்.



செல்போன் : செல்போன் வீட்டில் தலை மாட்டிற்கு பக்கத்தில் வைத்து படுத்தல் கூடாது. மூளையை பாதிக்க வாய்ப்புள்ளது. அதில் வரும் ரேஸ்கள் வீட்டின் நல்ல அதிர்வுகளும் செயல் இழக்க வைக்கும். அதனால் தினமும் சூரிய உதயம், சூரிய அஸ்தமனங்களில் அக்னி ஹோத்ரா செய்து வர வீட்டிற்கும் உடம்பிற்கும் பாதிப்பு ஏற்படாது.

மாணவர்கள் : உங்கள் குழந்தைகள் மகன், மகள், சரியாக படிக்காதற்கு அல்லது மறந்து போவதற்கும் காரணம் – வீட்டின் வ/கி மூலை (ஈசானம்) யில் செப்டிங் டேங்க், கழிவறை, ஹீட்டர் டேங், வெட்டு, மேடு, மாஸ்டர் பெட்ரூம் போன்றவை இருந்தால் உங்கள் மகன்/மகளுக்கு அதிக மதிப்பெண் கிடைக்காது. ஏன் ஞாபகசக்தி நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகும். (குரு பகவான் – மூலை) புத்திக்காரன். குழந்தைகளை குருபகவான் ஆட்சி செய்கிறார்.

வீட்டிலிருந்து வெளியே அல்லது ஆபிஸ் செல்லும் போது பலவற்றை மறக்க வாய்ப்புள்ளது. என்ன செய்ய?

வீட்டிற்குள் வ/கி மூலையில் உள்ள செருப்பு, குப்பைகள், அழுக்கு துணி, போன்றவை இருந்தால் இம்மறதியிருக்கும். சுத்தமாக வைத்துக் கொள்ளவும். மேலும் கீழ்க்கண்ட மந்திரத்தை (P to W) நினைவில் கொள்ளவும். P to W CP, Q, R, S, T, U, V, W என்ற பார்முலா மந்திரத்தை நினைவில் கொள்ள வேண்டும்.

P - பென், பர்ஸ்
Q - குயின் பாக்ஸ், லஞ்ச் பாக்ஸ்
R - ரிங் (மோதிரம்) ரிஜிட் வாட்ச்
S - மூக்கு கண்ணாடி, கடை சாவி, செல் போன்
T - டவல் (கைக்குட்டை)
U - குடை, தொப்பி, ஹெல்மெட்
V - வண்டி சாவி, லைசென்ஸ், பேப்பர்
W - ஜன்னல், கதவு, கேஸ் மூடிய நினைவு

இதை (P to W) மந்திரத்தை எங்கிருந்து சொன்னாலும் இதை ஞாபகப்படுத்திக் கொண்டால் எந்த பொருட்களும் கொண்டு செல்ல மறப்பதில்லை

P to W என்ற மந்திரம் சொல்ல மறந்தால் கண்டிப்பாக மருத்துவரை அணுகுவது நல்லது.

பெண்களே உஷார் : பெண்கள் வீட்டில் பூட்டிக் கொண்டு வேலை செய்யும் போது திடீரென்று யாராவது வந்து உங்கள் மகன், கணவருக்கு உயிருக்கு ஆபத்து அல்லது விபத்து என்று சொன்னால் – செய்ய வேண்டியது என்ன ?



வந்திருக்கும் நபர் சொன்னவுடன் நாம் படபடப்புடன் கதவைத் திறந்து விசாரிப்போம். அது உண்மையாகவோ, பொய்யாகவோ இருக்கலாம். பொய் எனில் உங்கள் பணம், நகை போக வாய்ப்புள்ளது! இது ஏன் நடக்கிறது. எப்படி சமாளிப்பது?

வீட்டின் தெ/மே (கன்னி) மூலையில் கழிவறை / போர் / செப்டிங் டேங் / மழைநீர் சேகரிப்பு தொட்டி / சாம்ப் மிகப்பெரிய காலியிடம் மற்றும் அக்னி மூலையில் பள்ளம் இருப்பின் நாம் ஏமாற வாய்ப்புள்ளது. எப்படி தவிர்க்கலாம்?

பெட்ரூம், கட்டிலில், சேரில், பூஜை அறை எதிரில் அமர்ந்து தினமும் 108 தடவை காயத்ரி மந்திரம், கணபதி மந்திரம், பிரித்யங்ர தேவி மந்திரம் 48 நாட்கள் காலை அல்லது மாலை 5 முதல் 6 மணிக்குள் இதை மனதில் சொல்ல வேண்டும். 10 நிமிடம் தியானம் செய்யவும். தினமும் செய்து முடித்த பின் தலைவாசலில் வந்து தொட்டு வணங்கி பின் ஜெபித் இடத்திலேயே அமரவும். இப்போது தினமும் மந்திர உச்சாடனம் செய்து அந்த இடத்தை மிக ஆற்றலுள்ள சக்தி மிக்க இடமாக மாறும். இதை உணர முடியும். யாராவது போன் அல்லது நேரில் வந்து திடீர் தகவல் கொடுத்தால் உடனே மந்திரம் ஜெபித்த இடத்தில் சென்று 5 விநாடிகள் நின்றால் போதும். உங்களுக்கு வந்த நபர் நல்லவன் அல்லது பிரச்சினைக்குரிய நபர் என்று சக்திமிக்க இடம் சொல்லும்.

நமச்சிவாய மந்திர இயந்திரம் : வீட்டினுள் தீய சக்திகள் உள்ளே வராமல் இருக்க துஷ்ட தேவதைகள் பிரச்சினைகள் அகல, தொழிலில் முதன்மையாகவும், கணவன், மனைவி ஆயுட்காலம் நன்றாக இருக்கவும், குழந்தைகள் நல்ல பெயர் எடுக்கவும், கீழ்க்கண்ட நமசிவாய என்ற 13 கட்ட அமைப்புகளை ஒரு வெள்ளை தாளில் எழுதி மஞ்சள் குங்குமம் இட்டு பூஜை அறையில் வைக்க நல்ல பயன் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் அறிவாளியாக திகழ்வார்கள். போட்டோ செய்தும் வைத்துக் கொள்ளலாம்.

1

ந	ம	சி	வ	ய
ம	சி	வ	ய	ந
சி	வ	ய	ந	ம
வ	ய	ந	ம	சி
ய	ந	ம	சி	வ

2

ம	சி	வ	ய	ந
சி	வ	ய	ந	ம
வ	ய	ந	ம	சி
ய	ந	ம	சி	வ
ந	ம	சி	வ	ய

3

சி	வ	ய	ந	ம
வ	ய	ந	ம	சி
ய	ந	ம	சி	வ
ந	ம	சி	வ	ய
ம	சி	வ	ய	ந

4

வ	ய	ந	ம	சி
ய	ந	ம	சி	வ
ந	ம	சி	வ	ய
ம	சி	வ	ய	ந
சி	வ	ய	ந	ம

ய	ந	ம	சி	வ
ந	ம	சி	வ	ய
ம	சி	வ	ய	ந
சி	வ	ய	ந	ம
வ	ய	ந	ம	சி

ம	ந	ய	வ	சி
சி	ம	ந	ய	வ
வ	சி	ம	ந	ய
ய	வ	சி	ம	ந
ந	ய	வ	சி	ம

ந	ம	சி	வ	ய
ந	ம	சி	வ	ய
ந	ம	சி	வ	ய
ந	ம	சி	வ	ய
ந	ம	சி	வ	ய

சி	ம	ந	ய	வ
வ	சி	ம	ந	ய
ய	வ	சி	ம	ந
ந	ய	வ	சி	ம
ம	ந	ய	வ	சி

ய	வ	சி	ம	ந
ந	ய	வ	சி	ம
ம	ந	ய	வ	சி
சி	ம	ந	ய	வ
வ	சி	ம	ந	ய

வ	சி	ம	ந	ய
ய	வ	சி	ம	ந
ந	ய	வ	சி	ம
ம	ந	ய	வ	சி
சி	ம	ந	ய	வ

ந	ய	வ	சி	ம
ம	ந	ய	வ	சி
சி	ம	ந	ய	வ
வ	சி	ம	ந	ய
ய	வ	சி	ம	ந

ய	ய	ய	ய	ய
வ	வ	வ	வ	வ
சி	சி	சி	சி	சி
ம	ம	ம	ம	ம
ந	ந	ந	ந	ந

ந	ந	ந	ந	ந
ம	ம	ம	ம	ம
சி	சி	சி	சி	சி
வ	வ	வ	வ	வ
ய	ய	ய	ய	ய

சாதனை குழந்தை : ஏழை விவசாயி 60–70 ரூபாய் நாள் சம்பளம். அவரது மகன் ஷலேந்திரா தனது 13 வயதில் (உ.பி.) லக்னோ யுனிவர்சிட்டியில் B.C.A., (Final Year) பட்டப்படிப்பு முடிக்கப் போகிறான். அவனது தங்கை – சுஷ்மாவின் திறமை அண்ணனை மிஞ்சியுள்ளது. வயது 6 கல்வி 10ம் வகுப்பு தேர்வு எழுதப் போகிறாள். உலகிலேயே மிகக்குறைந்த வயதில்



10ம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவி. சுஷ்மாவின் குடும்பத்திற்கு ஒரு சிறிய அறை பள்ளி நிர்வாகம் ஒதுக்கியுள்ளது. அதில் அனைவரும் தங்கிப் படிக்கின்றனர். அறையில் மின்சாரம் கிடையாது. மெழுகுவர்த்தி தான். குழந்தையின் கல்விக் கட்டணத்தைக் கூட கட்ட முடியாமல் கஷ்டப்படும் ஏழைப் பெற்றோர்கள். ஆனால் எங்கள் குழந்தைகள் வருங்காலத்தில் அப்துல்கலாம் மாதிரி வருவார்கள் என்ற நம்பிக்கை – என்று கூறுகின்றனர்.

தாய் கர்ப்பமாக இருக்கும் போது, மந்த்ரம், வேதம், நல்ல செய்திகள் கேட்டதின் பிரதிபலனாக மெகா மூளையுள்ள குழந்தைகளை பெற்றனர். இக்குழந்தைகள் 30 வயதில் உலக சாதனைகளை புரிவார்கள்.

பாலம் கட்ட முடியுமா? ஏறத்தாழ 170 வருடங்களுக்கு முன் நியூயார்க் மற்றும் LONG ISLAND தீவுக்கும் இடையே பாலம் இல்லாமல் மக்கள் அவதிப்பட்டனர். கடல் மீது பாலம் கட்டுவது அந்த காலத்தில் நினைத்துக் கூட பார்க்க முடியாத விஷயம். பாலம் கட்ட முடியும் என்று ஜான் ரோப்லிங் என்ற ஓர் இன்ஜினியர் கூறினார்.

மகன் லிவிங்ஷ்டனுடன் பாலம் கட்டதிட்டமிட்டார். வேலையை ஆரம்பித்தார். சில மாதங்களிலேயே பாலத்தின் ஒரு பகுதி சரிந்து விழுந்ததில் ஜான் பரிதாபமாக இறந்து போனார். இந்த அதிர்ச்சியில் வாஷிங்டனும் சில நாட்களிலேயே பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டார். அவரது பேசும் திறன் பறிபோனது. வலது கையும் செயல்பட முடியாத அளவில் பாதிக்கப்பட்டது. வாஷிங்டன் மருத்துவ மனையில் படுத்த படுக்கை – பேசவோ எழுதவோ முடியவில்லை.

ஆனால் தன் இடது கை விரலால் தட்டி தன் மனைவியை – புரிய வைத்தார். ஒரு நாள் அவர் தன் மனைவி மூலமாக பாலம் கட்டும் இன்ஜினியர் களை மருத்துவமனைக்கு வரச்சொல்லி பாதியில் நின்று போன பாலம் கட்டும் வேலை மீண்டும் ஆரம்பிக்க உத்தரவு பிறப்பித்தார். அடுத்தடுத்த வேலைகள் எப்படி நடைபெற வேண்டும் என்ற திட்டம் – தன் மனைவியிடமே புதிய (விரலால் தட்டி) பாஷையின் வாயிலாக சொல்ல அந்த கனவு பாலம், வாஷிங்டன் கனவு கண்டபடியே எழுந்து நின்றது. 10 வருடம் கழித்து Brooklyn Bridge போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டது. மேலே சொன்னது கதையல்ல நிஜம். இவர்கள் வீட்டின் வ/கி மற்றும் தெ/மே மூலை சரியில்லாமல் போனதால் ஜான் இறந்தார்.

ஆனால் வாஷிங்டன் பக்கவாதத்தில் மருத்துவமனையில் சிகிச்சை பலன் அளித்த காரணம் ஆஸ்பத்திரி வ/கி மூலை நல்ல வளர்ச்சி பெற்றதின் காரணம். தன்னுடைய இடது – கைவிரல் அசைவினால் வலது மூளையின் செயல்திறன் அதிகமாகி அதில் பதிவான கனவு பாலம் நிஜமாக்க முடிந்தது. வீட்டின் மூலை சரியாக இருந்திருப்பின் ஜான் / வாஷிங்டன் போன்ற மெகா மூளை மனிதர்கள் பல பாலங்கள் உருவாக்கியிருப்பார்கள். உலகம் இவர்களை தலையில் தூக்கி வைத்து ஆடியிருக்கும்.



மனம் இருந்தால் சாதிக்க முடியும் : 1982 டிசம்பர் 4 ஆஸ்ரேலியா, பாதிரியார் அன்பாக பேசுவார். துன்பம் வந்தாலும் அதை இன்பமாக எடுத்துக் கொள்வார். அவருக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தி வந்தது. ஓடி சென்று பார்த்தப்போது அதிர்ச்சி. குழந்தைக்கு கை, கால் இன்றி சதுரமாக தலை, உடல் மட்டுமிருந்தது. குழந்தையின் புன்னகை முகம் கண்ணீரை வரவழைத்தது. குழந்தையின் மூச்சு சுவாசம் நன்றாக இருந்தது. உயிருக்கு ஆபத்து இல்லை. ஆண்டவன் படைப்பு. இவன் வளர யாராவது துணை வேண்டும் என்று மருத்துவர் கூறினார். அவனை ஒரு சாதனையாளராக உருவாக்குகிறேன் என்று கூறி குழந்தையை அழைத்துச் சென்றார்.

நிக் என்ற பெயருடன் பல பள்ளிகளில் அனுமதி கிடைக்காமல் – கடைசியாக உயர்ந்த பள்ளியில் சேர்த்தார். மாலை நிக் பள்ளியிலிருந்து கண்ணீருடன் வந்தான். தற்கொலை எண்ணம் தூண்டியது. தகப்பனார் அறிவுரை கூற மனதில் புது எண்ணம் தோன்றியது. அடுத்த நாள் கேலி செய்தவர்களை அலட்சியப் படுத்தினான். இன்று நிக் ஒரு பி.காம்., பட்டதாரி மட்டுமல்ல அனைவரும் விரும்பும் மிகச்சிறந்த நம்பிக்கை பேச்சாளர். அவருடைய பேச்சு மாணவர்கள் முதல் Executive, VIP வரை கேட்கின்றனர். நல்ல சிரிப்பு மிக்க முகம் ஆராய்ச்சி செய்யும் எண்ணம். இதை படிக்கும் ஒவ்வொருவர் மனதிலும் ஒரு மாற்றம் வருவது நிச்சயம் என நம்புகின்றேன்.

வீட்டின் வ/கி மூலையில் இருந்து பிரமிப்பூட்டும் சக்திகள் உருவாகின்றன. இம்மூலையில் வெட்டு, கழிவறை போட்டதின் விளைவு – நிக் ஊனமாக பிறந்தான். நிக் தாயார் கர்ப்ப காலத்தில் – கெட்டுப்போன வ/கி – மூலையின் (சக்திகள்) நச்சுக் காற்றை சுவாசித்ததின் விளைவு – கை/கா–ன்றி குழந்தை பிறப்பு. தெ/மே – மூலை சரியாக இருந்ததால் – மூளை வளர்ச்சியும், படைப்பாற்றலில் பிறரை மிஞ்சும் வண்ணமும், பேச்சாற்றலில் சாதனையும் படைக்கின்றான்.

இவர்கள் வீட்டின் வ/கி – சரியாக இருந்திருந்தால் நிக் ஆஸ்திரேலியாவில் பில்கேட்ஸ் அளவிற்கு உயர்ந்திருப்பான். ஜாதகத்தில் இது போன்ற குறை காண்பது இயலாது. வீட்டில் குறை இருந்தால் மட்டுமே முடியும்.

பிறந்ததிலிருந்து அழும் சிறுவன் : பெல்லாரி, ஹிரடனஹள்ளி – காஜி கேரியில் – வசிப்பவர் இமாம் சாப். அவருக்கு 2 ஆண் 2 பெண் குழந்தை – ஆரோக்கியமாக உள்ளார்கள். கடைசியாக (5) வதாக பிறந்தவன் யாசின் 8 ஆண்டுகளாக அழுது கொண்டேயிருக்கிறான். யாசினுக்கு விரல்களே இல்லாத கைகள், வாயில் ஒரு பல்லும் இல்லை. விசித்திரமான கால்கள். தலையில் இது வரை முடி வளராமல் முதியவன் போல் காட்சியளிக்க காரணம் என்ன ? வீட்டின் வ/கி வெட்டு, உயரமானவை. கழிவறை இருந்ததின் விளைவாக, பிறந்த குழந்தை ஊனம். மேலும் இது வரை அழுது கொண்டே



இருக்க காரணம் வ/கி மூலையில் ஈரமின்மை. இச்சிறுவனால் – பெற்றோருக்கு வறுமை. தெ/மே ல் பள்ளம், வெளியிடம். முதல் 4 குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க 4 மூலைகளின் தவறின் விளைவாக 5வதாக (புதன் அலித்தன்மை) குறையுள்ள குழந்தை பிறப்பு. மூலைகள் சரியாக இருந்திருப்பின் மூளை உணர்ச்சியில்லா அறிவுமிக்க குழந்தைகள் பிறக்கக்கூடும்.

தேசிய கவி பாரதியார் : மூளையை சரியாக பயன்படுத்தினார் – புரட்சி செய்தார். காணி நிலம் வேண்டுமென்று பராசக்தியிடம் கம்பீரமாக கேட்டார். நிலம் கிடைப்பதற்குள் 32வது வயதில், பழக்கமுள்ள யானை மிதித்து உயிர் துறந்தார். வ/கி ஈசான மூலை (குரு பகவான்) குரு வாகனம் – யானை, வ/கி மூலை தவறு இருந்ததால் மிகப்பெரிய மூளையுள்ள மாமனிதரை இழந்தது.

நாடு போற்றும் மனிதர் : அப்துல் கலாம் பிறப்பதற்கு முன் தாய் தந்தையர்கள் தெ/மே (கன்னி) மூலையில் உள்ள நல்ல அதிர்வுகள், தூய காற்று, சுவாசம் பெற்று நல்ல சக்தியுள்ள ஆற்றல் பெற்றதால் இந்தியாவிற்கு மெகா பிரைன் உள்ள அப்துல் கலாம் கிடைத்தார்.

குறிப்பு : அப்துல் கலாம் மிகப்பெரிய விஞ்ஞானி, சாட்டிலைட் மூலம் அமெரிக்காவிற்கு தெரியாத வண்ணம் அணு சோதனை நடத்தியவர். மிகப்பெரிய விஞ்ஞானி 15% மூளை பயன்படுத்துகிறார் என்றால் நாம் எவ்வளவு மூளையை பயன்படுத்துகிறோம்?

வல்லமை தாராயோ: நாதஸ்வரம், மேளம் போன்ற இசைக் கருவி உபயோகித்து மேடை கச்சேரி செய்திருப்பார்கள் பலர். அவர்களுக்கு பிறக்கும் குழந்தை கடல் தாண்டி கச்சேரி செய்யும் அளவுக்கு புகழ் பெறுவான் என்பது பெற்றோரின் நம்பிக்கை. வீட்டின் மூலையும் அதையும் தாண்டி கருவில் இருக்கும்போதே – அக்குழந்தை இசை கேட்டு பழகியிருப்பான். இதற்கு காரணம் குழந்தையின் வலது மூளையில் பதிவாகியிருக்கும். தகப்பனாரின் வலது மூளையில் பதிவான கனவு தான் நிஜமானது. (ஏ.ஆர். ரஹ்மான், குன்றகுடி வைத்திய நாதன், இன்னும் இளம் கலைஞர்கள்) உலகத்திற்கே தெரிந்த பித்தோவான் மிகப்பெரிய இசை கலைஞன். இவருக்கு வாய் பேச முடியாது, காதும் கேட்காது. (Deaf and Dumb)

கலிலியோ : லட்சிய வெறியன் 19 வயதில் கடிகார பெண்டுலம், 24 வயதில் பைசா நகர கோபுர சாதனை, தொலை நோக்கி என பல கண்டுபிடிப்புகள். 74 வயதில் முற்றிலும் குருடானார், செவிடானார். அதன்பின் 3 வருடம் இயற்பியல் எழுதினார். கண்டுபிடிப்புகள் அனைத்தும் நான்கு சுவற்றிற்குள் நடைபெற்றது. மூலைகள் சரியாக இருந்ததின் பிரதிபலன். சோதனைகள் அனைத்தும் சாதனையானது. மூளையில் உள்ள ஆற்றல் பிரமிப்பூட்டும் சக்திகள் கூட அது மூளையில் சாதனை படைக்க உதவியது.


சிவ சிவ

- வாஸ்துபடி கட்டிடங்கள் சிறந்த முறையில் செய்து கொடுக்க
- வரைபடம் வரைந்து கொடுக்க வரைபடம் பரிசீலனை செய்யவும்
-
- வெளியூரில் வாஸ்து பார்க்க கட்டிடம் கன்ஷ்ட்ரக்ஷன் செய்யவும்
- வீட்டின் மூலைகள் கெட்டால் மூலைகள் சிறப்படையாமல் செயழில்லாமல் போக காரணம் என்ன?
- குழந்தைகள் அதிக குறும்பு செய்வதும் படிக்காமல் போகவும் ஈசான மூலையில் என்ன குறையிருந்தால் இருந்தால் இவ்வாறு ஆகும் ?
- திடீர் தொழில் சரிவு, உடல் மெலிவு, நாள்பட்ட நோய் இவைகளுக்கு காரணம் என்ன?
- வெளிநாடு செல்ல முடியாமல் தவிர்ப்பவர்க்கு வீட்டின் எந்த மூலையில் தவறு?



சிவ சிவ சரவணன்

- பெண்கள் திருமணதடைக்கு அக்னிமூலையில் என்ன குறை இருந்தால் தடை ஏற்படக் காரணம்?
- ஈசான மூலையில் தவறு ஏற்படுவதினால் சிறு, பெரு மூலையில் உள்ள பதிவுகள், செயல், ஞாபகசக்தி மற்றும் வேகம் எவ்வாறு குறையும்?
- ஜாதகம், கைரேகை, எண் கணிதம் எவ்வளவு நன்றாக அமைந்தாலும் வீட்டின் மூளைகள் வாஸ்துபடி அமைந்தால் மட்டுமே வளரமுடியும்.



தாமஸ் ஆல்வா எடிசன் : மாணவ பருவத்தில் மக்கு, உதவாக்கரை என்று ஆசிரியர்கள் அழைப்பார்கள்.

வீட்டில் வ/கி மூலையில் பெட்ரூம் அமையாது இருந்திருந்தால், குழந்தை எடிசன் திக்கி பேசுவதும், காது கேளாமை குறையுடன் பிறந்திருக்க மாட்டான். வீட்டின் மூலை தான் கெட்டது. தாய், தந்தையார் மூளையை உபயோகித்து அவனக்கு சுயமாக பாடம் சொல்லிக் கொடுத்தனார். தெ/மே மூலை நன்றாக – இருந்ததின் விளைவாக படைப்பாற்றல் என்ற கதவு திறந்து கொண்டது. 24வது வயதில் 10 கண்டுபிடிப்புகள். மேலும் மின்சாரம், பல்பு, புகைப்படம் ஒலிப்பெருக்கி என 3000 க்கும் மேற்பட்டவை கண்டுபிடித்தார். கடைசி வரை எதையும் சரியாக படிக்க திணறினார். நல்ல அதிர்வலைகள் உள்ளே வரும்படி தலைவாசல் அமைத்ததும் எடிசன் மூளை துரிதமானது. கண்டுபிடிப்புகள் சொந்தமானது.

இவர் பிறந்த அதே தினத்தன்று தனது 82வது வயதில் சொந்த வீட்டில் உயிர்பிரிந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கூறிய விஞ்ஞானி போல் ஆவதற்கு வீட்டின் மூலையை கவனத்தில் கொண்டோமேயானால் மூளை தெளிவாகும். அறிவு நல்வழியில் சிந்திக்கும், கண்டுபிடிப்புகள் சொந்தமாகும்.

ஐசக்நியூட்டன் : நியூட்டன் அனுசோக்கை, புவிஈர்ப்பு விசை, பதினைந்து மாதத்தில் லத்தின் மொழியில் இருபதாண்டு கால கண்டுபிடிப்புகளை இரண்டரை லட்சம் சொற்களால் எழுதினார். உலகிலேயே மிகப்பெரிய அறிவியல் நூல். ஆராய்ச்சி மையம் அமைந்த இடம் – வ/கி மூலை – ஆராய்ச்சி எண்ணத்தை தூண்டியதும். அனைத்து ஆராய்ச்சியும் வெற்றியடையச் செய்யும். ஆராய்ச்சி மையத்தின் மூலைகளும் நியூட்டன் மூளையில் பதிந்த உயர்ந்த எண்ணங்களும் நேர்கோட்டில் அமைந்ததே அதிசயம்.

ரைட் சகோதரர்கள் : அண்ணன், தம்பி படிக்கும் காலத்தில் இருவரும் – ஆராய்ச்சி செய்யும் பழக்கமிருந்தது. 8வது படிக்கும் போதே இருவரும் நாங்கள் ஆகாயத்தில் பறப்போம் என ஆசிரியரிடம் கூற அவர்கள் சிரித்தார்கள். நாட்கள் கடந்தன. பனிக்கட்டி சரக்கு விளையாடும் போது விபத்து ஏற்பட்டு படிப்பு பாதியில் (+2 நின்று போனது) சைக்கிள் கடை, பேப்பர் பிரஸ் என நல்ல தொழில் முன்னேற்றம் இருந்தது. கிளைடர் புத்தகம் கிடைத்தது படித்தார்கள். ஒரு நாள் அமெரிக்க இராணுவம் பல கோடி மதிப்பில் விமானம் தயாரித்ததை பறக்க நாள் குறித்து பல லட்சம் பேர் கூட பார்த்தனர். ஆனால் விமானம் ஒரு இன்ச் கூட நகரவில்லை. பின் அமெரிக்க அரசாங்கம் இனி பல ஆண்டுகளுக்கு பின் தான் சோதனை செய்யப்படும் என்று அறிக்கையிட்டனர். அதிலிருந்து ஒரு வாரத்தில் கடற்கரையில் ரைட் சகோதரர்கள் தயாரித்த சில லட்சங்களில் உருவான விமானம் பல அடி உயரம் தகப்பனாருடன் பறந்து காண்பித்தனர்.



வீட்டை நல்ல வெளிச்சத்துடன் காற்றோட்டத்துடனும் வ/கி மூலை நீண்டும், தெ/மே அடைத்தும் இருந்தால் எல்லோரும் தரையில் தான் சாதனை செய்தார்கள். 2 பேரின் மூளை பயன் காரணமாக உலகில் முதல் முறையாக விண்ணில் சாதனை நிகழ்ந்தது. ரைட் சகோதரர்களின் முன்னோர்களின் (Generation) வலது மூளையில் பதிந்த லட்சியம் தான் அவர்கள் சாதனை செய்து காண்பித்தார்கள்.

ஆப்ரகாம்லிங்கன் : தோற்றால் பெரிய பதவி காத்திருக்கிறது என்று கூறியவர். வீட்டின் ஈசானத்தில் குறை இருந்ததின் விளைவாக உடல் தோற்றம் வித்தியாசமாக இருந்தது. நரம்பு தளர்ச்சி வியாதி, இரு கால்களும் ஒரே மாதிரி இல்லாமை என பல தொந்தரவுகள் வீட்டின் மூலைகளை கவனிக்காமல் இருந்ததால் 21 வது வயதில் வியாபாரத்தில் தோல்வி, 22 வயதில் மாநில தேர்தலில் தோல்வி, 26 வயதில் நரம்பு தளர்ச்சி 28 வயதில் சபாநாயகர் தேர்தலில் தோல்வி 33 வயதில் மக்களவைக்கான தோல்வி, 46 வயதில் உதவி ஜனாதிபதி தேர்தலில் தோல்வி, 48 வயதில் செனட் தேர்தலில் தோல்வி, 50 வயதில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் அமோக வெற்றி. இது இவருடைய விடா முயற்சி, நம்பிக்கை மூளையின் சிந்தனை இவரை உயர்த்தியது. வலது மூளையில் பதிவானது காலம் கடந்து நடந்தது. உலகில் இவரிடம் மட்டுமே மூலைகள் தோற்று போனது. கிரகங்கள் உறங்கும் போது சிவலிங்கம் என்ற பெயரில் உள்ள முதல் ஆப்ரகாம் லிங்கன் முழித்துக் கொண்டார். 22 வயதில் வீட்டின் மூலைகளை கவனித்திருந்தால் இளம் வயதில் சாதனை புரிந்திருப்பார்.

கடல் கொலம்பஸ் : கடலுக்கு அப்பால் மனித இனம் இருக்குமென்று நம்பினார் திரு. கொலம்பஸ். 7 ஆண்டுகள் பல சோதனைகளுக்கு பிறகு கடல் பயணம் செய்து அமெரிக்காவை கண்டுபிடித்தார். இவருடைய தாய், தந்தையர் தன்னுடைய வீட்டின் வ/கி மூலையில் அமர்ந்து சிந்தித்ததும், தியானித்ததும் வலது மூளையில் பதிவானதை மகன் கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடிக்க உதவியது.

அண்ணல் காந்தியடிகள் : இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கித் தந்த அண்ணல் மகாத்மா காந்தியடிகள் உலகிலேயே அஹிம்சை முறை பயன்படுத்தி சுதந்திர வாங்கிக் கொடுத்தார். அதிகமாக மூளை (அறிவை பயன்படுத்தியவர்) இவர் இரண்டு விசயங்களை வலது இடது கைகளால் ஒரே நேரத்தில் எழுதுவார். நாடு போற்றும் மனிதருக்கு கிடைத்த பரிசு. துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார். வலது மூளையில் பதிவானது, செயலானது.

குறிப்பு : இறைவன் படைப்பு ஒருவர் ஜனனமானதில் இருந்து 120 வருடம் வரை வாழ வேண்டுமென்பது விதி. ஆனால் வாழ்க்கையில் மூலைகளையும் மூளையையும் கவனத்தில் கொள்ளாததால் இறப்பு. இதை ஜாதகத்தில் திசை சுற்று என்று சொல்லலாம்.



ஐன்ஸ்டீன் : மிகப்பெரிய விஞ்ஞானி, பலவற்றை கண்டுபிடித்துள்ளார். ஆனால் சிறு குறை என்னவென்றால் இவர் பேசும் போது கஷ்டப்பட்டு பேசுவார். எழுதுவதிலும் தவறுடன் எழுதுவார். 9 வயது வரை எழுத்து கூட்டி படித்தார். இவருக்கு டிஸ்லெக்ஸியா நோய் இருந்தது. வீட்டின் வ/கி மூலை தவறின் விளைவே குறை. ஆனால் தெ/மே மூலை உயர்வின் காரணமாக மூளை நல்ல அறிவைத் தந்தது. இவர் இறந்தும் உலகிலேயே ஐந்தாவதாக வருடத்திற்கு 92 கோடி சம்பாதிக்கிறார். (இறந்தும் இறவா புகழ்)

கோர விபத்து : விமானம், ரயில், பஸ், கார், விபத்துக்களில் ஏராளமானோர் உயிர் இழக்கிறார்கள். இவர்களுக்கு ஜாதகப்படி கண்டிப்பாக கண்டம் மட்டுமே தவிர உயிர் இழப்பில்லை. ஆனால் வீட்டின் மூலைகள் கெட்டு போனதால் இவர்கள் இறப்பு வீட்டிலில்லாமல் போனது. மூளை விழிப்புடன் இருந்தும் மூலையினால் இறப்பு ஏற்பட காரணமானது.

பஞ்ச பாண்டவர்கள் : பஞ்ச பாண்டவர்கள் சூதாட்டம் ஆடி நாட்டை இழந்து வனவாசம் செல்ல கார்ணம் வீட்டின் மூலை சரியில்லாமல் போய் மூளைகள் சரியாக வேலை செய்யாமல் போனதால் நாடு கை விட்டு போக காரணமானது.

ஸ்ரீராமர் : காலை விடிந்தால் பட்டாபிஷேகம் நாட்டு மன்னர் ஆக வேண்டியவர் இரவு முடித்து காலை விடிந்ததும் கைகேகியின் சூழ்ச்சியில் 14 ஆண்டுகள் வனவாசம் செல்ல வேண்டியதாயிற்று. அரச மாளிகை மூலைகள் சரியில்லாததால் (மூளை) அறிவு குறுக்கு வழியில் வேளை செய்து வனவாசம் அனுப்பப்பட்டது.

குந்தி சாபம் : கர்ணன் இறந்தவுடன் குந்தி பல பழிகளை கிருஷ்ணர் மீது சுமத்தி சபித்தாள். கர்ணன் 5 சாபங்களை பெற்று இறந்து போனவன். மேலும் உயிரிழந்த கர்ணனை அழித்தது அர்ச்சுனன். திட்டங்கள் கொடுத்தது மெகா பிரைன் கிருஷ்ணர். கொடுக்கும் கரங்கள் நல்லவர்கள் பூமியிலிருக்கக்கூடாது என்பதால் தன்னுடன் கிருஷ்ணர் சேர்த்துக் கொண்டார். கிருஷ்ணர் மருவுருவம் கர்ணன். இதில் குந்தி சாபம் என்ன செய்யும். குந்தி இருந்த இடம் கார்னர் சரியில்லாததால் ஐவரின் பலம் ஒரு சேர இருந்த கர்ணனை இழந்திருப்பார்களா ?

இரவில் கனவில் வருவது பலிக்குமா?

சரியான மூலையில் படுத்து உறங்கினால் கனவு வராது. தவறான இடத்தில் படுத்தால் (தெ/கி, வ/கி) மூளைக்கு சரியான காற்று, இரத்தம் செல்லாமல் தடுக்கப்பட்டு ஆழ்மனதில் பதிந்தவை கற்பனையில் உள்ளவை வெளியேறும். (By God Grace mind & Body purified proposes automatically) இரவில் தூங்குவது புத்துணர்ச்சி பெறவே. இதில் கனவு பலன் வேறு. கனவு அதிகம் வந்தால் தூக்கம் சரியில்லையென்று அர்த்தம்.

அசைவ உணவு (கோழி, ஆடு, மீன்) சமைப்பதால் சாப்பிடுவதால் நன்மையா, தீமையா?



வீடு 100% வாஸ்து படி இருந்தால் அசைவ உணவு சமைப்பதும் சாப்பிடுவதும் குறையும். வீட்டில் நல்ல அதிர்வலைகள் (ஈசான) வ/கி மூலையில் உருவாகி தெ/மேல் அது விரிவடையும். நாம் அசைவ உணவு சமைப்பதால் (உம். இறந்த கோழியை பல மணிநேரம் கழித்து நாம் சமைக்கும்போது அதிலிருந்து Bad Cells or Bacteria வெளியேறி நல்ல காற்றுடன் கலந்து அது நச்சுக் காற்றாக மாறும். நல்ல அதிர்வுகள் சிதரும். சமைத்த உணவு உட்கொள்ளுவதால் செரிமானமாக 30 மணி நேரம் எடுத்துக் கொள்ளும். (வயிறு – செப்டிங் டேங்க்) அரசாங்க அனுமதியுடன் கொலை செய்யப்பட்ட ஆட்டுப்பிணங்களை சாப்பிடுவதால் மூளையின் வேலை குறைகிறது. கடலில் வாழும் மீன் இரசாயன கழிவுகளையும் உப்பையும் உண்டு உயிர்வாழ்கிறது. அம்மீனை நாம் சாப்பிடுவதால் வயிற்றுப்போக்கு, வாந்தி பேதி மிஞ்சம். வாஸ்து குறையுள்ள வீட்டில் மீனை வளர்த்தால் தோஷம் நீங்குமென்று சாஸ்திரம் உண்டு. அதையே நாம் சாப்பிடலாமா? நல்ல சத்து உள்ள பல சைவ உணவு உண்டு மூளையை துரிதப்படுத்தலாமே.

கை, கால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டு Rod, Plate வைக்க காரணம் வீட்டின் தெ/மே மூலையில் சமையல் அறை அமைத்ததால் ஜீவசக்தி நிரம்பியுள்ள, இம்மூலை கெட்டு போவதுடன் மூளைக்கு இரத்தம் சரியாக செல்லவிடாமல் செய்து செயல்பாட்டை குறைத்து அதனால் விபத்து ஏற்படுகிறது. ஜாதகம் பார்த்தால் குறை தெரியாது. மூலை கெடுவதினால் Rod, Plate வைக்கும் தொழில் சிரிக்கிறது.

வீடு, 10 தலைமுறை வாரிசுகள், சந்ததியர்கள் வந்தாலும் வீடு விற்கக் கூடாது. மேலும் செல்வ செழிப்புடன் இருந்து வர மட்டுமே வேண்டுமெனில் (மனை) வீடு வேளை ஆரம்பிக்கும் போது வாஸ்து குச்சியை வேம்பு, அத்தி, ஆல், வில்வம், பாளை மரத்தினால் ஆனதாக இருக்க வேண்டாம். குச்சியில் பஞ்சலோக கவசம் ஏதேனும் செய்து பூமியிலிருந்து 30' பள்ளத்தில் வைத்தல் வேண்டும். செவ்வாய், வெள்ளிக்கிழமை, குரு சுக்ர ஹோரை கௌரி, நட்சத்திரம், ரிஷப துலான லக்னம் வாஸ்து நாளில், கிரகப்பிரவேசம் பூஜை செய்ய கட்டிடத்தில் நல்ல உயிரோட்டமிருக்கும். (கவனத்தில் கொள்ள வேண்டியது மூலை)

ஜாதகம் : வீட்டைக்கட்டிபார், கல்யாணம் செய்து பார்!!

லக்னத்திற்கு 4ல் குரு இருந்தால் மாட மாளிகை கட்டி வாழ்வான். குரு உச்சம் பெற்றால் செல்வந்தர் ஆவார். பூஜை அறை தனியாக இருக்க வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாக இருக்க முடியும்.



லக்னம் 4ல் சுக்கிரன் இருந்தால் வீடே பொருட்காட்சி போல் காட்சியளிக்கும். சுக்கிரன் உச்சம் பெற பிறந்ததிலிருந்து சொந்த வீடு இருக்கும்.

செவ்வாய் ஆட்சி, உச்சம் பெற்றால் பூமியினால் வாழ்வுண்டு. குரு பார்வையிருந்தால், மனையில் வீடு கட்டி வர அதிர்ஷ்டம் கூடிவரும்.

லக்னம் 4ல் சூரியன் இருக்க அரசாங்க கட்டிடத்தில் வசிக்க வாய்ப்புள்ளது.

வீடு கட்ட வேண்டுமெனில் செவ்வாய் திசை, சுக்கிரதிசை, குரு திசையின் புத்தி நடந்தால் மட்டுமே வீடு கட்ட வாய்ப்புள்ளது.

அசுவினி, மகம், மூலத்தில் பிறந்தவர்கள் வீடு கட்ட ஆசீர்வாதம் பெற, பூமி பூஜை செய்ய, நல்ல வளர்ச்சி, செல்வ செழிப்புடன் வாழ முடியும். மேலுள்ள நட்சத்திரம் கேதுவினுடையது – ஞானகாரகன்.

கட்டிட வேலை ஆரம்பிக்க, கான்கிரீட் போட, தலைவாசல் அமைக்க, கிரகப்பிரவேசம் செய்ய கீழ்கண்ட 10 நட்சத்திரங்கள் உன்னதமானவை. மற்றவை விலக்கவும்.

அசுவினி, மூலம்	–	கேது 4 பாதங்கள்
ரோகினி, திருவோணம், ஹஸ்தம்	–	சந்திரன் 4 பாதங்கள்
பூசம், அனுஷம், உத்திரட்டாதி	–	சனி 4 பாதங்கள்
சதயம்	–	ராகு 4 பாதங்கள்
ரேவதி	–	புதன் 4 பாதங்கள்


ஒரே ராசியில் சந்திரன் இருப்பது முக்கியமாகாது. அவ்வாறு 4 பாதங்களிலும் ஒரே ராசியில் இருக்கும் நட்சத்திரங்கள் தான் சுபகாரியங்களுக்கு மேல் உள்ள நட்சத்திரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

19வது நட்சத்திரம் மூலம் - மூலத்தில் பிறந்தவர்கள் :-

திருஞான சம்பந்தர், அப்பர், அனுமன், திருநீலகண்டர், யாழ்ப்பாணர், முருகநாயனார், திருநீலமூர்த்தி, நாயனார், கருப்புழ்யாழ்வார், மணவாளான முனிவர்.

மூலநட்சத்திரத்தன்று சுலபமானது முதல் கடினமான வேலை வரை ஆரம்பிக்கலாம். நன்றாக முடியும். கட்டுமான பணிக்கு உகந்த நட்சத்திரம்.

மூலத்தில் பிறந்தவர்கள் வீட்டின் பின்புறம் மாமரம் நட எப்பொழுதும் அவ்வீட்டில் நல்ல அதிர்வலைகள் இருந்துக் கொண்டேயிருக்கும்.



மாவிளை தோரணம் வீட்டின் முன்புறம் தலைவாசலில் கட்டுவதும், சுபகாரியங்களில் பூர்ண கும்பத்தில் மாவிலை சேர்க்கப்படுகின்றன. மாவிலைக்கு மட்டும் தான் வெட்ட வெளியிலுள்ள காந்த சக்திகளை இழுக்கும் ஆற்றல் உண்டு. தொர்பைக்கு நிகரானது மாவிலை. வெளியில் கொட்டிக் கிடக்கும் சக்திகள் கும்பத்தில் வைக்கப்படும் மாவிலை வழியாக உயிர்ப் படைகிறது. அந்நீரை மறுநாள் குளிக்கும் போது நாம் சேர்த்துக்கொள்ளலாம்.

வீட்டின் முன்புறம் அரசமரம் இருந்தால் செல்வம் வளரும். ஆரோக்கியத்திற்கு குறையிருக்காது. அதிக அளவு காற்றை இழுத்து அதிகாலை வெளியேற்றும். இக்காற்றை சுவாசம் செய்வதால் உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மூளைக்கு நல்ல காற்று செல்லும். வீட்டின் முன் / பின் புறம் வேப்பமரம் இருக்க நோய் பக்கத்தில் வராது. கிருமிகளை கொல்லும் ஆற்றல் அதிகமுள்ளது. அம்மை நோய் வந்தால் வேப்பிலை பயன்படுத்துவது வழக்கம். வீட்டின் தலைவாசல் கட்டை வேப்பமரத்திலிருக்க விசேஷம். பெண்களுக்கு வயிற்று பிணி, கர்ப்பப்பை கோளாறு, மாதவிடாய் பிரச்சினையுள்ளவர்கள் இம்மரத்தை சுற்றிவர குணமடையும்.

திருமணமாகாத பெண்கள், குழந்தை பாக்கியம் பெற அரசமரம் மற்றும் வேப்ப மரம் சேர்ந்துள்ள இடத்தில் (விநாயகர் இருக்க) அதிகாலை 4.30 முதல் 6.00 மணிக்குள் 21 முறை அல்லது 48 முறை சுற்றி வர சீக்கிரமே திருமணம் அமையும் மற்றும் குழந்தை கிடைக்கும்.

சுற்றும் போது சொல்ல வேண்டிய மந்த்ரம்

மூலதோ பிரம்ம ரூபாயா
மத்தியதோ விஷ்ணு ரூபினே
அக்ரதோ சிவரூபாய
விருக்ஷ ராஜயோதே நம:

இரு மரமுள்ள இடத்தில் சஷ்டியப்த பூஜை (60வது திருமணம்) செய்து கொள்ள மேலும் 60 வயது ஆரோக்கியத்துடன்வாழ குரு பகவான் ஆசீர்வதிப்பார்.

இடது கை பழக்கமுண்டா?

நாம் அதிகமாக வலது கை உபயோகப்படுத்தினால் சாதாரண வீட்டில் வசிப்பவன் (வ/கி மூலை) கஷ்டப்பட்டு முன்னேருபவர்கள்.

நாம் இடது கை பழக்கமுள்ளவர்கள் (தெ/மே மூலை) ஏனெனில் படைப்பாற்றல் சக்தி உள்ளவர். ஆராய்ச்சி செய்பவர். ஏதேனும் சாதிக்காமல் ஓயமாட்டார்கள். இடது கை பயன்படுத்தினால் வலது மூளையில் பதிவாகும். அப்படியே நாளடைவில் செயலாகும்.



சிறுவயதில் குழந்தைகள் இடது கையில் எழுதவும், சாப்பிடவும் செய்வார்கள். அதை பெற்றோர்கள் மாற்றுவது தவறு. ஆராய்ச்சி எண்ணம் கெட்டுப்போவதற்கு முதல்படி. வலது மூளையில் காயன்கற்பத்தில் இருக்கும் போதே பதிந்தவை அழிந்தும் மறைந்தும் போக வாய்ப்புள்ளது.

நினைப்பது நடப்பது!

தினந்தோறும் 56,000 எண்ணங்கள் வந்து போகும். அதில் 55000 எண்ணங்கள் பழைய பற்றியே சிந்திக்கும். 1000 மட்டும் பிற்காலம் பற்றி சிந்திக்கும். இதில் மூளையில் பதிக்க வேண்டியவை (Present) நிகழ் காலத்தை பற்றி சிந்திக்க விடுவதே இல்லை.

மூளையில் 50 பெட்டகங்கள் உள்ளது. அதில் கேட்டல், நுகர்தல், காட்சிகள் என தனித்தனியாக அந்த பெட்டகங்களில் பதிவாகின்றன. கெட்ட எண்ணங்கள் உடனே பதிவாகும். மூளை ஒரு பஞ்சு போல். நல்ல எண்ணங்கள் சிந்திக்கச் செய்யும். இதை நன்றாக ஒரு முறை தூசி தட்டி சரி செய்துவிட்டால் போதும் பின் நல்ல எண்ணங்கள் பதிவாக ஆரம்பிக்கும். செயல்படுத்தவும் முடியும்.

குழந்தைகள், மாணவர்கள் பள்ளியில் முதல் மாணவனாக வர...

குழந்தைகள், மாணவர்கள் எழுந்தவுடன் சூரிய நமஸ்காரம், உடற்பயிற்சி செய்ய வைக்கவும் – 2 நிமிடம்

பிரயாணமாம் – குருவின் உதவியுடன் கற்றுக்கொண்டால் களைப்பு இருக்காது. வகுப்பில் அசமந்தமாக இருக்க மாட்டார்கள். – 5 நிமிடம்

யோகாசனம் செய்வதால் நல்ல ஞாபக சக்தியிருக்கும். மூளைக்கு நல்ல காற்று மற்றும் இரத்தம் செல்லும் பயிற்சிகள் – செய்து பின் படிக்க அமர்ந்தால் நன்றாக பதியும். ஞாபகத்தில் இருக்கும்.

தொடர்ந்து 3 மணி நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து படித்தல் கூடாது. 1 மணி நேரத்திற்கு 5 நிமிடம் இடைவெளியில் சென்று (Refresh) செய்து படித்தால் நன்றாக பதியும். இல்லையெனில் கடைசி படித்த 1 மணி நேரம் மட்டும் நினைவில் இருக்கும்.

சில மாணவ மாணவிகள் இரவில் படிக்கும் பழக்கமிருக்கும். காலை / மாலை டிவி விளையாடுவது என்று இருப்பார்கள். ஆனால் இரவு 10 மணியானவுடன் அவர்கள் மூளை விழித்துக் கொள்ளும். தவறில்லை சுற்று (Cycle) மாற்ற வேண்டாம். இரவு மட்டுமே இவர்களுக்கு ஏதுவான நேரமாக இருக்கும்.

சில மாணவர்கள் படித்துக் கொண்டே டிவி பார்ப்பது, பாட்டு கேட்பது போன்றவை செய்வார்கள். இது முற்றிலும் தவறு. மாற்றிக்கொள்வது நல்லது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அற்புதம் :-



மதுரை மீனாட்சி சொக்கநாதர் கோவிலில் இருப்பது சுயம்பு லிங்கம். உயரம் 20'. அதன் கீழ்பாகம் 400' வரை செல்கிறது. (கல்) சக்திகள் ஆகாயத்தில் (கோபுரத்தின் பிரமீடு) இருந்து பெறப்பட்டு லிங்கம் வாயிலாக பூமிக்கு வலிமை மிக்க ஆற்றலாக மாறி மக்களுக்கு அருள் பாலிக்கின்றார். இவ்வாற்றல் கோயில் சுற்றி 5 கி.மீ. பரந்து விரிந்துள்ளது. பல அதிசயங்கள் மதுரையம்பதியில் நடந்துள்ளது. (நால்வர்) மேலும் எங்குமில்லாத அதிசயம் சிவபெருமான் பல இடங்களில் காட்சி மட்டுமே கொடுத்திருக்கிறார். ஆனால் மதுரையம்பதியில் மட்டுமே வாழ்ந்திருக்கிறார். மீனாட்சி தாயார் வேள்வியின் (அக்னி) போது கிடைக்கப் பெற்ற வரப்பிரசாதம். மீனாட்சி திருக்கல்யாணம் நடந்த ஸ்தலம். சிவபெருமான் வாழ்ந்த இப்பூமியில் மூலைகள் அனைத்தும் சரியாக அமைத்து அதில் வாழும் பிறக்கும் உயரிய மூளையுடன் இருக்க அருள் பாலிக்கிறார். இங்கு தொழில் தொடங்குவோர் செல்வ செழிப்புடன் வாழ்வது நிச்சயம் (உ.ம். வடநாட்டினர்)


நம்பிக்கை :

வல்லமை தாராயோ :

சோதனை இல்லாமல் சாதனை இல்லை!
வல்லமை வேண்டுமென்றால் வலிமை
மிக்க எண்ணங்கள் உலைக்குள் பிறக்க வேண்டும்!
வெற்றி பெற வேண்டுமெனில் தோல்விகள்
சந்தித்திருக்க வேண்டும்! இல்லையெனில்
அதன் உயர்வு தெரியாது! தினமும் போராடுபவன்
ஜெயிக்க வேண்டுமெனில் கண் விழித்து கனவு
காண வேண்டும். கனவு நிஜமாகும்
கனவுகள் வலது மூளையில் பதிவாகும்
மூலைகள் கவனித்தால் வாழ்கை வசமாகும்!
வாழ்க்கை வாழ்வது ஒரு முறை
சாதித்தே தீருவோம் என்று வெறிகோள்!
வாழ்ந்து தான் பார்ப்போமே!
தோல்வி என்பது நம்பிக்கை!
வெற்றி என்பது தன்னம்பிக்கை!

பௌர்ணமி பூஜை - செல்வ வளம் உண்டாக:

பௌர்ணமியன்று மொட்டை மாடியில் கிழக்கு நோக்கி அமர்ந்த நிலையில் வாழை இலை அமைத்து அதன் மேல் குத்துவிளக்கு 5 வகையான



திரி, எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றவும். மஞ்சள் பிள்ளையார் வைத்து அருகம்புல் வைக்கவும். பெரிய தாம்பூலம் இலையின் கீழ்பாகத்தில் வைத்து அதில் தண்ணீர் ஊற்றி ரோஜா பூ. துளசி, பச்சை கற்பூரம், மஞ்சள் பொடி, 2 வாழைப்பழம், ஏலக்காய் பொடி செய்து போடவும். இப்போது வானத்தில் உள்ள பௌர்ணமி நிலாவின் பிம்பம் தாம்பூலத்தில் உள்ள தண்ணீரில் தெரியும். (இந்த அமைப்பு இரவில் சுமார் 11 மணிக்கு மேல் தெரியும்)

வேண்டுதல் : - ஸ்ரீ விநாயகர், குலதெய்வம், வழிபாடு தெய்வம், இஷ்ட தெய்வம் நினைத்து நாம் செய்யும் இப்பூஜையால் எங்கள் மகன், மகள் திருமணம், கட்டிட வேலை என ஏனைய குறைகள் வேண்டி பத்தி, சூடம், சாம்பிராணி, 1 முக விளக்கு தண்ணிரிலுள்ள பிம்பத்திற்கும் வானத்திற்கும் அமர்ந்தபடியே காண்பிக்கவும். எங்கள் வாழ்க்கையில் இது போல் பிரகாசமாக இருக்க வேண்டி சந்திர பகவானை 'ஸ்ரீ சந்திர மௌலீஸ்வராய நமஹ!!' என்ற மந்திரத்தை 51 அல்லது 108 தடவைகள் ஜெபித்து சந்திர காயத்ரி – 11 முறை சொல்லி தூபதீபம் காண்பித்து பூஜையை நிறைவு செய்யவும்.

தாம்பூலத்தில் உள்ள தீர்த்தத்தை சொம்பில் ஊற்றி கையில் எடுத்துக் கொண்டு வ/கி ஈசான மூலையில் சற்று தள்ளி வடக்கு பக்கத்திலிருந்து ஆரம்பித்து வீட்டை சுற்றி தெளித்து கடைசியாக ஈசானத்தில் முடிக்கவும். முகத்திலும் தண்ணீரை தெளித்துக் கொள்ளவும். தலைவாசலில் மீதமுள்ள நீரை ஊற்றவும். இப்பூஜை 15 நிமிடம் செய்தால் போதும்.

இப்பூஜையை பௌர்ணமியன்று இரவில் மட்டும் நம்பிக்கையோடு மன உறுதியோடும் செய்யும் குடும்பத்தினர் எல்லா வளங்களும் பெற்று நல்வாழ்வு பெறுவர்.

கால சர்ப தோஷம் நீங்க:-

ராகு / கேது தோஷமுள்ளவர்கள், வீட்டின் தெ/மேல் பள்ளம், போர், கழிவறையுள்ளவர்கள் அவசியம் கீழ்கண்ட பூஜை செய்யவும்.

மஞ்சள் பிள்ளையார், மஞ்சள் பொடி, வாழை இலை, 5 முக விளக்கு (5க்கு5=25 தீபங்கள்) ஒற்றை விளக்கு2, வீட்டின் ஹாலில் மையத்தில் வடக்கு தெற்காக – அரிசி மாவில் மலர்ந்த நிலையில் தாமரைக்கோலம் போடவும். காம்பு தெற்கு நோக்கி இருக்க வேண்டும். அதன் மையத்தில் வாழை இலை போடவும். மேற்பகுதியில் குத்து விளக்குகள் 5 வைத்து 7 வகை எண்ணெய் ஊற்றி கதம் சூட்டி தீபமேற்றவும். இடது பக்கம் பிள்ளையார் வைத்து அருகம்புல் இட்டு, பழம், வெற்றிலை பாக்கு, துளசி, மல்லிகை பூ போடவும். செம்பு அல்லது குடத்தில் பால், தண்ணீர் வைத்து அதில் ரோஜாப்பூ, துளசி, பச்சை கற்பூரம், மஞ்சள் பொடி, ஏலக்காய் பொடி செய்து போடவும். இலையில் சிகப்பு காணப்பயர் (கொள்ளு) முழு கருப்பு உளுந்தம் பயறு வைக்கவும்.

வேண்டுதல் :- இஷ்ட தெய்வம், குல தெய்வம், வழிபாடு தெய்வம் குறைகளை சொல்லி வேண்டிக் கொள்ளவும்.



தெ/மே ல் வாஸ்து தோஷம், நாக தோஷம் சர்ப்ப தோஷம் நீங்க வேண்டும் என்று பிரார்த்தித்து அந்த தீவினைகள் யாவும் வ/கி மூலை வழியாக வெளியேற வேண்டுமென்று தியானிக்கவும்.

அதன் இலையை வல இடமாக சுற்ற வேண்டும். ஒரு சுற்று 12 முறையே **ஹே அமிர்த இராகு கேதுவே நமஹ** என்று கூற 108 தடவைகள் மந்திரத்தை கூற வேண்டும்.

சுற்றி முடிந்ததும் கற்பூர தூபதீபம் காண்பிக்கவும். பிரசாதத்தை அனைவருக்கும் அணிவித்தும் கொடுக்கவும். செம்பு நீர் வீட்டின் அனைத்து மூலைகளிலும் தெளிக்கவும். விளக்கு தவிர அனைத்து பொருட்களும் கிணறு, குளத்தில் சென்று போடவும். இலையை பசுவிற்கு கொடுக்கவும்.

அக்னிஹோத்ரா நல்ல அதிர்வலைகள் உண்டாக ஆரோக்கியமாக வாழ: 1984ம் ஆண்டு டிசம்பர் 23ந் தேதி இரவு மத்தியப்பிரதேசத்தில் போபால் என்ற ஊரில் விஷ வாயு (MIC) கசிந்து சுமார் 4000 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் ஊனமானார்கள். இச்சம்பவம் உலகையே உலுக்கியது.

இந்த கோர விபத்து மத்தியில் ஓர் அதிசயம் 4 குடும்பங்கள் மட்டும் விஷ வாயு பாதிப்புக்குள்ளாகாமல் ஆரோக்கியமாக இருந்தனர். இக்குடும்பத்தினர் அக்னி ஹோத்ரா செய்பவர்கள் என்று தெரிய வந்தது.

அக்னி ஹோத்ராவின் பயன் : விஷத்தை முறிக்கும் ஆற்றல், மன இறுக்கம், நாட்பட்டட நோய், தோல் நோய் போன்றவை குணமடைகிறது. குடி பழக்கம், புகை பிடிப்பவர்கள் வீட்டில் செய்ய சில நாட்களில் மனம் அவற்றை வெறுக்கும்படி செய்யும். தாவரங்கள் மேல் சாம்பல் தூவ நல்ல விளைச்சல் எதிர்பார்க்கலாம். பெண்களுக்கு மாதவிடாய், புற்றுநோய் மற்றும் வீட்டில் தீயசக்திகள் வராமல் தடுக்கிறது. சுனாமி, பூகம்பம் தாக்காது.

செய்முறை :- "3 முதல் 4 நிமிடங்கள் மட்டுமே செய்தல்" சூரிய உதயத்தின் போது செம்பு உலோகத்திலான அரை வடிவ பிரமீடு அதில் பசுவராட்டி வைத்து அரசங்குச்சி சிலவற்றையும் சேர்த்து சூரிய உதய 5 நிமிடத்திற்கு முன் ஏற்றவும். காயத்ரி மந்திரம் ஜெபிக்கவும். சரியாக உதயத்தின் போது நல்ல அக்னியில் நெய்யில் தொய்த்த பச்சரிசியை அதில் இட வேண்டும். மாலையில் அதே போல் செய்ய வேண்டும். ஜாதி, மதம் இல்லை. அனைவரும் செய்யலாம்.

காலையில் சொல்ல வேண்டிய மந்திரம்

சூர்பாய ஸ்வாஹா! சூர்யாய இதம் நமம!!

பிரஜாபதயே ஸ்வாஹா! பிரஜாபதயே இதம் நமம!!



மாலையில்

அக்னியே ஸ்வாஹா! அக்னியே இதம் நமம!!

பிரஜாபதயே ஸ்வாஹா! பிரஜாபதயே இதம் நமம!!

Bonus, Extra Benefit :- கட்டிடம் கட்டுபவர்கள் கட்டுமான ஆரம்பம் முதல் முடியும் வரை அக்னிஹோத்ரா செய்ய கட்டிடத்தில் பாதுகாப்பு வளையம் உருவாகும். எதிர்மறை அதிர்வுகள் அண்டாது. சூரியனிடமிருந்து கல்யாண சக்கரம் வெளிப்படும் ஆற்றலை கிரகித்து கட்டிடத்திற்குள் அனுப்பும் சக்தி அக்னிஹோத்ராவிற்கு மட்டுமே. அச்சாம்பலை கட்டுமான கலவையுடன் சேர்த்து கட்ட அடியேன் கட்டும் கட்டிடங்களில் தினமும் அக்னி ஹோத்ரா செய்கிறேன்.

அக்னி ஹோத்ரா முடிந்தவுடன் 1 மணி நேரம் கழித்து அப்பாத்திரத்தில் சுத்த நீர் நிரப்பி மாலை வரை வைத்து அந்நீரை முகம் கழுவ கரும்புள்ளிகள், பருக்கள் மறையும். மேனி பழபழக்கும். தலைவலி வராது. அக்னி ஹோத்ரா நேரம், பஞ்சாங்கம் அறிய அடியேனிடம் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களுக்கு அப்துல்கலாம் ஆப்ரகான் லிங்கன் பில்கேட் மற்றும் எடிசன் போன்ற சாதனையாளர்கள் போல் குழந்தை பிறக்க வேண்டுமா?

1வது மாதம்	வீட்டின் தெ/மே மூலையில் மாஸ்டர் பெட்ரூம் அமைத்தல், எம்மாதிரியான சாதனையாளர்கள் என்று தீர்மானித்து பெரிய போட்டோ ஒன்றை கிழக்கு சுவற்றில் ஒற்றி அதை பார்த்து வர வேண்டும்.
2வது மாதம்	குழந்தை எப்பொழுதும் முதல் மாணவன், படு சுட்டிக் என்று கண்மூடி மனத்திரையில் குழந்தையை பார்க்கவும்
3வது மாதம்	10, +2 வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் என்று செய்தி கேட்டு சந்தோஷப்படுதல்
4வது மாதம்	மகன்/மகள் இன்ஜினியரிங் காலேஜ், கோல்ட் மெடலிஸ்ட்
5வது மாதம்	கல்லூரி முடிவில் கேம்பஸ் இன்டர்வியூ செலக்சன் – 60,000.00 ஒரு மாத சம்பளம் – வெளி நாட்டில் வேலை என்ற கற்பனையில் 20 நிமிடம் தினமும் மனத்திரையில் பார்க்க வலது மூளையில் காட்சிகள் பதியப்பட்டு செயலாக்கும்.
6வது மாதம்	மகன் பெரிய பதவி – பெயர், புகழ் அரசாங்க அதிகாரி
7வது மாதம்	வளைகாப்பு அன்று இரவு அதே சந்தோஷத்தில் இருவரும் மகன்/மகளுக்கு திருமணம் நடப்பது போல



8வது மாதம் கூட்டு குடும்பத்தில் மணமகன்/மகள் சந்தோஷம்

9வது மாதம் மகளுக்கு வெளிநாட்டில் அல்லது அரசாங்கத்தில் உயர்பதவி

10வது மாதம் மருமகளுக்கு கருத்தறிப்பு உறுதி (Pregnant Conform) என்ற செய்தி கேட்கவும். உங்களுக்கு சுகப்பிரசவத்தால் மகன் பிறக்கவும் சரியாக இருக்கும்.

இதற்கு முழு நம்பிக்கை, ஒரே இடம், தியானம், போட்டோ, மாதம் ஒரு முறை ஒவ்வொரு செயல் மாற்றல் என செய்து வர மகன் நீங்கள் எவ்வாறு நினைக்கிறீர்களோ அது போல் உருவாவான்.

மூளையுள்ள பல கோடீஸ்வரர்கள் வீட்டின் மூலைகள் சரியில்லாமல் போனதால் வாடகைக்கு வீட்டிற்கு போகும் அவலை நிலை.

மூளையில்லாத சில மக்கள் மூலைகளை பயந்து பயன்படுத்தியதின் விளைவாக குறுகிய நாட்களில் கோடீஸ்வரர் ஆகியுள்ளனர். (இதைத்தான் அதிர்ஷ்டம் என்ற கூறுவதுண்டு)

அபிமன்யூ தாயின் (சுபத்ரா) வயிற்றிலிருக்கும் போது கிருஷ்ணர் கதை சொல்ல அதை கேட்டுக்கொண்டே உறங்கி விடுகிறாள். ஆனால் உஉஉ என்ற சத்தம் கேட்டது. வயிற்றினுள் இருந்த குழந்தை (அபிமன்யூ)கேட்டுக் கொண்டிருந்தான். கதை என்னவென்றால் – போர் யுத்தத்தில் பகைவனின் கோட்டையில் சென்று சண்டையிடுவதை கேட்டுக் கொண்டிருந்தவுன் கதை முடிவதற்குள் தாயின் வயிற்றிலிருந்த வெளியே வந்துவிட்டான் மிஸ்டர். அபிமன்யூ

18வயது நிரம்பியிருக்கும் போது வலது மூளையில் தாயின் வயிற்றிலிருக்கும் போது பதிவான காட்சிகள் கதைகள் அப்படியே அவன் போர் யூகத்தில் அவனுக்கு சுலபமானது. துரதிர்ஷ்டம் என்னவென்றால் கோட்டைக்குள் சென்ற அபிமன்யு–க்கு வெளியே வர தெரியாமல் இறந்தான். (வெளியே வரும் கதை கிருஷ்ணர் சொல்லி முடிப்பதற்குள் வெளி வந்தது தான்) அரண்மனை வாரிசு மூலை வ/கி தவறின் விளைவே.

வாழ்க்கை வாழ்வது ஒரு முறை, வாழ்க்கை பயனுள்ளதாக மாற்றுங்கள்.

*****

ஜுன் 19ல் 2007ல் எமது அடுத்த வெளியிடு :

உன்னால் முடியும்